# இயல் – 3 வழக்கு- இலக்கணம்

**வழக்கு** என்பது மக்களின் பேச்சு வழக்கிலும், இலக்கிய வழக்கிலும் சொற்கள் வழங்கப்படும் முறை அல்லது பயன்படுத்தப்படும் முறை ஆகும். நம் முன்னோர்கள் எந்தப் பொருளை எந்தச் சொல்லால் வழங்கி வந்தனரோ நாமும் அவ்வாறே வழங்கி வருவதைக் குறிக்கும்.

வழக்கு என்பது மரபு அல்லது பழக்கம் என்ற பொருளிலும் கையாளப்படுகிறது. ஒரு சில காலத்தில் இலக்கண விதிகளுக்கு மாற்றாகச் சொற்கள் பயின்றுவரின் அதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே வழக்காகும்.

# வழக்கின் வகைகள்

தமிழ் இலக்கணத்தில் வழக்கு இருவகைப்படும்.

1. இயல்பு வழக்கு
2. தகுதி வழக்கு


வழக்கு
இயல்பு வழக்கு
தகுதி வழக்கு
இலக்கணமுடையது
இலக்கணப்போலி
மரூஉ
இடக்கரடக்கல்
மங்கலம்
குழூஉக்குறி

# இயல்பு வழக்கு
(மூன்று வகைப்படும்)

| இலக்கணமுடையது | இலக்கணப்போலி (அல்லது) முன்பின் தொக்கப்போலி | மரூஉ |
|---|---|---|
| நிலம், மரம், வான், எழுது | மூன்றில், நுனிக்கிளை | தஞ்சை, நெல்லை |
| இலக்கண நெறி மாறாமல் அமைந்த சொல் | இல்முன், கிளைநுனி என்ற இலக்கண முறைப்படி அமையாத சொற்கள் இலக்கணப்போலி ஆகும் | இலக்கண நெறியிலிருந்து பிறழ்ந்து சிதைந்து வழங்கும் சொற்கள் |

## தகுதி வழக்கு

பொருள்களுக்கு அல்லது செயல்களுக்கு இயல்பாய் அமைந்த சொற்களை வழங்குவது தகுதியன்று எனக்கருதி, அவற்றை ஒழித்து (மறைத்து) **தகுதியான** வேறு சொற்களால் அப்பொருள்களை அல்லது செயல்களை வழங்குதல் **தகுதி வழக்கு** எனப்படும்.

அனைவரின் முன்னும் பேசத்தாகாத சொற்களுக்குப் பதிலியாக **தகுதியான** சொற்களைப் பேசுதலாகும்.

# தகுதி வழக்கு-வகைகள்

| இடக்கரடக்கல் | மங்கலம் | குழூஉக்குறி |
|---|---|---|
| • பிறரிடம் வெளிப்படையாகச் சொல்லத் தகாத சொற்களைத் தகுதியுடைய வேறு சொற்களால் கூறுவது<br>• (எ.கா.) குழந்தை வெளியே போய்விட்டது. | • மங்கலமில்லாத சொற்களை மங்கலமான வேறு சொற்களால் குறிப்பதை மங்கலம்<br>• (எ.கா.) விளக்கை அணை - விளக்கைக் குளிரவை | • ஒரு குழுவினார் ஒரு பொருள் அல்லது செயலைக் குறிக்கத் தமக்குள் பயன்படுத்திக்கொள்ளும் சொற்கள்<br>• (எ.கா.) பொன்னைப் பறி எனல் |


நன்றி
Thank You!